முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.01.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **அருட்குருவாக வந்த அரங்கனே**
**ஆறுமுகனாரின் ஞான அவதாரமே**
**தருமராசனே ஞான தேசிகனே உன்**
**தயவை பெற்ற மக்களெல்லாம்**

2. மக்களெல்லாம் உயருவர் என்று கூறி
மண்ணுலகில் ஒளி சூட்சும நூலை
தக்கதொரு **விளம்பி கலை திங்கள்**
**தரணியிலே சஷ்டி திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிற்றுக்கிழமை)**

3. **வாரமதில் மதுரகவி ஆழ்வாரும்**
வழங்குவேன் உலகோர் நலம் பெற
வாரமெல்லாம் அரங்கன் தரிசனம்
வருபவரின் ஏற்பவரின் சோரம் போக்கும்

4. போக்கும் அவர்களின் ருணமிடரை
பிரச்சனைகளான பிணி சோடை
தாக்கும் ஏவல் சத்ரு இடரை நீக்கி
தவராசன் ஆசி காத்தருளும்

5. அருளும் இடை கண்டமிலா வாழ்வாய்
அணுகும் தொண்டர் பெருமக்கட்கு
இருளெனும் கோள் குற்றமும்
எவராலும் வஞ்சம் அணுகா காப்பு

6. காப்புடன் ஆயுள் கீர்த்தியும்
கண்ணியமான வாழ்வு வளமும்
மூப்பு நரை திரை அண்டா
முழுமையான ஞானமும் தந்து மீட்கும்

7. மீட்கும் தேசிகன் தீட்சை
மேன்மை தரும் அரங்கன் ஆசி
தீட்டு சகல துக்கங்களை விரட்டி
தெளிவு திடம் தேகமனோ பலமருளும்

8. பலமான அரங்கன் தரும
பாதை வழி வந்த மக்களுக்கு
சலனமோ சச்சரவோ அணுகா
சமாதான சாந்தநிலை கூடியே

9. கூடியே இன மத பேதமிலா
குவலயம் யாவும் இணைக்கும்
நெடிய தயவு சிந்தை வளர
நிலவுலகே சமத்துவம் காணும்

10. காணவே ஆறுமுகனராக வந்த
கருணைமிக்க தவசி அரங்கன்
ஞானமே உயர் வேதமாகும்
நல்வழி காட்டும் அருள் மந்திரமாகும்

11. ஆகவே ஆறுமுகா அரங்கா என
அனுதினம் செபதபம் செய்திட்டாலே
யுகமாற்றம் நடந்தேறும் உறுதி
உரைத்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மதுரகவி ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அறியாமையில் மூழ்கி கிடக்கும் கலியுக மக்களை மீட்கவே அருட்குருவாக இவ்வுலகிற்கு வந்திட்ட அரங்கமகானே முருகப்பெருமானாரின் ஞான அவதாரமே எல்லையில்லா தர்மங்களைச் செய்து உலகின் தர்மத்தை காக்கின்ற தர்மராசனே மக்களுக்கு ஞானம் அளிக்கும் ஞானதேசிகனே அற்புத மகா ஞானியே உமது தயவை பெற்றிட்ட மக்களெல்லாம் உலகினில் உயர்வான நிலையை அடைந்து சிறப்படைவார்கள் என்றே அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதியே ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே மதுரகவி ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மதுரகவி ஆழ்வார்.

வாரந்தோறும் அரங்க தரிசனம்தனை தவறாமல் தரிசிக்கின்றவர்களுக்கு அவர்களை அண்டிய குற்றம் எல்லாம் விலகிப் போகும். அவர்களின் கடன்சுமைகள் எல்லாம் நீங்கிவிடும். அவர்களை வருத்தும் பிரச்சனைகள் எல்லாம் நீங்கிவிடும், பிணிகள் விலகும், துன்பங்கள் விலகும், அவர்களை அரூபநிலையில் நின்று தாக்கும் ஏவல் சக்திகளும் விலகி எதிரிகளால் வரும் இடையூறுகள் எல்லாம் பொடிப்பொடியாகி தவராசன் அரங்கரின் அருள் அவர்களை காத்தருளும்.

நீடிய ஆயுளை, அரங்கன் அருள் தரும் அரங்கதரிசனம் பெற்றவர்களுக்கு உண்டான இடைக்கண்டம் எல்லாம் விலகிடும். அரங்கன் திருவடி பணிந்து அரங்கனிடம் சரணடைந்து தொண்டுகள் செய்து தொண்டர்கள் என பெயர் பெற்ற அரங்கனின் தொண்டர்களை இருள் எனக் கவ்வும் கோள் குற்றங்களும் (கிரக தோஷங்கள்) நீங்கி ஓடி விடுவதோடு எவராலும் வஞ்சிக்க முடியாத அருள் பாதுகாப்பையும் பெற்று சிறப்படைவார்கள், நீடிய ஆயுளையும், நிலைத்த புகழையும் அடைந்து சிறப்படைவார்கள், கண்ணியம்மிக்க வாழ்வினை வளமுடன் வாழ்வதுடன் வாழ்வினில் முதுமையும் நரைதிரை அண்டாத முழுமையான ஞானமும் தந்து அவர்களை அரங்கன் அருள் மீட்குமப்பா.

தொண்டர்களை நரைதிரை மூப்பிலிருந்து மீட்கும் அற்புத மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரமாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து பயபக்தியுடன் தீட்சை உபதேசத்தினை அடைந்து அரங்கன் ஆற்றும் தருமப் பணிகளுக்கு பொருளுதவிகள் செய்து அரங்கன் ஆசி பெற்றிட, தீட்டு எனப்படும் மலக்குற்றம் நீங்கிவிடும். அவர்களுக்கு உண்டான

துக்கங்களை எல்லாம் விரட்டிவிடும், மனோதிடமும், அறிவினில் தெளிவும் உண்டாகி திடமான ஆரோக்கியமான உடம்பும் மனதும் அமைந்து வளமுடன் வாழ்வார்கள்.

பலம்மிக்க தர்மசக்தியை தந்தருளும் அரங்கனின் தருமநெறியை ஏற்று தர்மங்களை செய்து அரங்கனின் தருமவழியினில் வந்திட்ட மக்களுக்கு சலனமோ சச்சரவுகளோ அணுகாமல் சமாதானம் பெருகி மனதில் சாந்தமான நிலை உருவாகி இனம், மதம், மொழி பேதங்கள் இல்லாத சூழ்நிலை மக்களிடையே உருவாகி உலகமெலாம் ஒன்றாக இணைக்கும்படியாக தயவுசிந்தை வளரும். உலகினில் தயவுசிந்தை வளரவளர இந்த பூவுலகமே சமத்துவ நிலையை அடைந்திடும்.

உலகம் தருமத்தின் வழியில் அரங்கனின் கொள்கை வழி பின்தொடர்ந்து சென்று தயவு பெருகி சமத்துவ நிலையை அடைய மார்க்கம் உரைத்திட்டவரும் ஆறுமுகப் பெருமானின் அவதாரமாக வந்த மகா ஞானியுமான கருணையே வடிவான மகா தவசி அரங்கமகா தேசிகனாரின் ஞானமே இப்பிரபஞ்சத்தில் உயர்வான வேதமாகும். அதுவே மக்களுக்கு நல்வழி காட்டும் அருள் மந்திரமாகும். ஆதலினால் உலக மக்களே ஆறுமுகனே அரங்கமகா தேசிகனே என அனுதினமும் மனம் உருகி ஜெபதபங்களை செய்து வந்தாலே இவ்வுலகினில் கலியுக துன்பம் எல்லாம் உலகை விட்டு விலகி ஓடி உலகமே யுகமாற்றம்தனை அடைந்து முருகப்பெருமானின் ஆட்சி உடைய ஞானயுகமாக மாறி நாடும் வீடும் செழித்து உலகமே ஒரு உன்னத நிலையை அடைந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மதுரகவி ஆழ்வார்.

–சுபம்–